# <u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>

## <u>MCOP - 48/2017</u>

**<u>நாள் – 05.06.2025</u>**

**<u>PW – 1</u>** கற்பகம்

**த/பெ.** கிருஷ்ணன்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of June 2025)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கு விபத்து 2011–ம் ஆண்டில் நடந்தது. விபத்து நடந்த தேதியில் எனக்கு என்ன வயது என்றால் 35 வயது இருந்திருக்கும். நான் கோயமுத்தூர் செல்வதற்காக வேண்டி அவிநாசி பழைய பேருந்து நிலையத்தில் தெற்குபுறமாக நின்று கொண்டிருந்தேன். அப்போது விஏஎஸ் தனியார் பேருந்து வந்து பஸ் ஸ்டாப்பில் நின்றது. அப்போது நான் பஸ்ஸில் முன்படிக்கட்டில் ஏறினேன். எனக்கு பின்னாடியும் சிலர் பஸ்சில் ஏறினார்கள் என்றால் சரிதான். அப்போது கண்டக்டர் விசில் அடிப்பதற்கு முன்பாகவே டிரைவர் பஸ்சைஎடுத்து விட்டார். அதனால் நான் படிக்கட்டில் இருந்து கீழே விழுந்து விட்டேன். அப்போது நான் மட்டும் தான் கீழே விழுந்தேன். எனக்கு பின்னாடி ஏறிய நபர்கள் யாரும் கீழே விழவில்லை. என்னுடைய கவனக்குறைவால் தான் நான் மட்டும் கீழே விழுந்து விட்டுள்ளேன் என்றும், அதற்கு பஸ்சின் ஓட்டுநர் பொறுப்பு கிடையாது என்றால் சரியல்ல. அதனால், 3–ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்கவேண்டிய அவசியமில்லை என்று சொன்னால் சரியல்ல.

2. விபத்து சமயத்தில் நான் மெடிக்கல் கடையில் மருந்து எடுத்து கொடுக்கும் வேலைக்கு சென்று கொண்டிருந்தேன். அப்போது எனக்கு

மாதம் ரூ.7,000/- சம்பளம் பெற்று வந்தேன். அந்த சம்பளத்தை நான் நேரடியாக தான் பெற்றுக்கொள்வேன். நான் மாதம் ரூ.7,000/- சம்பளம் பெற்று வந்தேன் என்பதை காட்ட அது சம்பந்தப்பட்ட ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விபத்தில் எனக்கு வலதுகால் முட்டியில் எலும்பு முறிவு ஏற்பட்டு ஆப்ரேஷன் செய்து கொண்டேன். நான் கோவை பெத்தேல் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன், அது சம்பந்தப்பட்ட மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். நான் தற்போது எந்த வேலைக்கும் செல்லவில்லை. வீட்டில் தான் இருந்து வருகிறேன். விபத்திற்கு பின்பு எனக்கு திருமணம் நடந்தது என்றால் சரிதான். எனக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளனர். என்னால் அதிக நேரம் நிற்க முடிவதில்லை. வீட்டு வேலைகளை நான் கவனித்து வருகிறேன். நான் கேட்டுள்ள இழப்பீடு அதிகமானதுஎன்றால் சரியல்ல. எனது கவனக்குறைவால் தான் இந்த விபத்து நடந்தது என்றும், அதனால் காப்பீட்டு நிறுவனமான 3-ம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. அதனால் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR
Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.06.05 16:55:33 +0530

**Subordinate Judge,**
**Avinashi.**